விஜயபாரதம்
மின்னணு தின இதழ் (தனிச்சுற்று) VIJAYABHARATHAM DAILY
பிலவ, ஆடி - 12 புதன் 28.07.2021 மலர் - 2, இதழ் - 113

# சாதித்த காதி கிராம ஆணையம்



விஜயபாரதம்

கொரோனா பிரச்சனைகள் இருந்தபோதிலும் காதி மற்றும் கிராம தொழில்கள் ஆணையம் ரூ. 95,741.74 கோடியை 202021ம் ஆண்டுக்கான வருவாயாக ஈட்டி புதிய சாதனை புரிந்துள்ளது. இது கடந்த 201920ல் ரூ. 88,887 கோடியாக இருந்தது. கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் இதன் வளர்ச்சி 7.71 சதவீதம் அதிகம்.

கடந்த ஐந்து ஆண்டுகளில் காதி பொருட்களின் உற்பத்தி இரு மடங்கிற்கும் மேலாகவும் விற்பனை மூன்று மடங்கும் அதிகரித்துள்ளது. இந்த காலகட்டத்தில் ஒவ்வொரு ஆண்டின் வளர்ச்சியும் சராசரியாக 19.45 சதவீதமாக அதிகரித்துள்ளது. ஆனால், இது 2004 முதல் 2014 வரையிலான காலகட்டத்தில் வளர்ச்சி வெறும் 6.25 சதவீதமாக இருந்தது குறிப்பிடத்தக்கது. காதி தொழிற்துறை புத்துயிர் பெற மத்திய அரசு மேற்கொண்ட தொடர் முயற்சிகள் மற்றும் பிரதமர் மோடியின் ‘மனத்தின் குரல்’ நிகழ்ச்சியில் காதி பொருட்களை அன்றாட வாழ்க்கையில் பயன்படுத்த அவர் விடுத்த தொடர் வேண்டுகோளின் விளைவாகவே இது சாத்தியமாகியுள்ளது.


விஜயபாரதம்

# கொள்முதல் சாதனை

நடப்பு ரபி பருவ விவசாய பொருட்கள் சந்தைப்படுத்தல் சீசனில் கோதுமை உற்பத்தி செய்யும் பெரும்பாலான மாநிலங்களிலிருந்து 433.32 லட்சம் மெட்ரிக் டன் கோதுமை கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. இது முன்பு 389.92 லட்சம் மெட்ரிக் டன்னாக இருந்தது. இதனால் சுமார் 49.15 லட்சம் விவசாயிகள் ரூ. 85,581.39 கோடியை நேரடியாக தங்கள் வங்கிக் கணக்கில் பெற்று பலன் அடைந்துள்ளனர். இதேபோல, தமிழகம், கர்நாடகா, மகாராஷ்டிரா, தெலுங்கானா மாநிலங்களில் இருந்து காரீப் பருவ அறுவடையான 108.42 லட்சம் மெட்ரிக் டன் அளவுக்கு பருப்பு, எண்ணெய் வித்துக்கள் வாங்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. ஆந்திரா, கர்நாடகா, தமிழ்நாடு மற்றும் கேரள மாநிலங்களுக்கு 1.74 லட்சம் மெட்ரிக் டன் அளவிற்கு கொப்பரை தேங்காய் வாங்குவதற்கான அனுமதியும் வழங்கப்பட்டுள்ளது. இவை அனைத்தும் மத்திய அரசு அறிவித்த புதிய வேளாண் சட்டங்களால் மட்டுமே சாத்தியமானது என்பது கண்கூடு.

# ஐ.எம்.ஏ. ஜெயலால் மனு நிராகரிப்பு




விஜயபாரதம்

இந்தியன் மெடிக்கல் அசோசியேஷன் (ஐ.எம்.ஏ) என்ற மருத்துவர்களுக்கான தனியார் தொண்டு அமைப்பின் தலைவர் டாக்டர் ஜே.ஏ.ஜெயலால், தனது உயர் பதவியை பயன்படுத்தி சக மருத்துவர்கள், மருத்துவப்பணி ஊழியர்கள், நோயாளிகளை மதமாற்றம் செய்ய தனது பதவியை பயன்படுத்தி வந்தார். இது குறித்து தனது பேட்டிகளிலிலும் அவர் வெளிப்படையாகவே கூறினார். ஏற்றுள்ள பொறுப்புக்கு மாறாக மத பிரசங்கமும் செய்து வந்தார். இதற்கு டெல்லி நீதிமன்றம் ஏற்கனவே தடை விதித்தது. இந்த தடையை எதிர்த்து அவர் நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்தார். இவ்வழக்கை விசாரித்த நீதிபதி, 'ஜெயலால் தனது மதத்தைப் பரப்புவதற்குப் பதிலாக மருத்துவ சகோதரத்துவத்தின் நலனில் கவனம் செலுத்துவது நல்லது. இந்திய அரசியலமைப்பில் கூறப்பட்டுள்ள கொள்கைகளுக்கு முரணான எந்தவொரு செயலிலும் ஈடுபட வேண்டாம். அவர் வகிக்கும் பதவியின் கௌரவத்தை பேண வேண்டும். பதவியை துஷ்பிரயோகம் செயுய வேண்டாம்' என கூறி அவரது மனுவை தள்ளுபடி செய்தார்.

# நிலுவைத்தொகை உடனடி விடுவிப்பு

Ministry of MSME, Govt. of India

விஜயபாரதம்

மக்களவையில் கேள்வி ஒன்றிற்கு பதிலளித்த நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன், கொரோனா தொற்று காலத்தை கருத்தில் கொண்டு, சிறு குறு தொழில்களுக்கான அமைப்பான எம்.எஸ்.எம்.இ. அதன் அந்த நிறுவனங்களின் அனைத்து நிலுவைத் தொகையையும் 45 நாட்களுக்குள் விடுவிக்க வேண்டியது கட்டாயமாக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார். மேலும், ஜிஎஸ்டி தொடர்பான பிரச்சினைகளை அகற்றுவது குறித்து ஜிஎஸ்டி கவுன்சில் குழு, நிலுவையில் உள்ள ஜி.எஸ்.டி பிரச்சனைகளை தீர்ப்பது குறித்து விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும். நலிந்த சிறு வணிக பிரிவுகள், மைக்ரோ மற்றும் சிறு தொழில்கள், பிற அமைப்புசாரா துறை நிறுவனங்களுக்கு மேலதிக ஆதரவை வழங்குவதற்காக ரூ. 10,000 கோடி சிறப்பு மூன்று ஆண்டு கால ரெப்போ நடவடிக்கைகளை (எஸ்.எல்.டி.ஆர்.ஓ) ரிசர்வ் வங்கி அறிவித்துள்ளது. கடன் வாங்குபவர்களுக்கு ரூ. 10 லட்சம்வரை புதிய கடன் வழங்குவதற்காக இந்த நிதி பயன்படுத்தப்படும். இந்த ஆண்டு அக்டோபர் 31வரை இந்த வசதி கிடைக்கும் என்றும் நிதியமைச்சர் தெரிவித்தார்.

# கொரோனா புதிய தடுப்பு மருந்து



விஜயபாரதம்

கொரோனா வைரஸ் தாக்கத்தை தடுக்க பல தடுப்பு மருந்துகள் கண்டுபிடிக்கப்பட்டு வருகின்றன. அதே நேரம் கொரோனாவும் கப்பா, டெல்டா, பீட்டா, காமா, எப்சிலான் என பல புதிய உருமாற்றத்தை அடைந்து வருகிறது. அலை அலையாக மக்களையும் தாக்குகிறது. இதனால் மேலும் சக்தி வாய்ந்த தடுப்பு மருந்துகளைக் கண்டுபிடிக்க உலகம் முழுவதும் புதிய ஆராய்ச்சிகள் நடைபெற்று வருகின்றன. அவ்வகையில் கனடாவின் டொரண்டோ பல்கலைக்கழக விஞ்ஞானிகள் கொரோனா வைரசுக்கு எதிராக தற்போது ஓர் பாதுகாப்பான தடுப்பு மருந்தை கண்டுபிடித்துவிட்டதாக அறிவித்துள்ளனர். புரோட்டோ ரிசர்ச் என்கிற இதழில் இந்த ஆய்வு முடிவுகள் பிரசுரிக்கப்பட்டுள்ளன. கொரோனா வைரஸின் 27 வகைகள் ஆயிரத்திற்கும் அதிகமான சாம்பிள்கள் இதற்காக ஆராயப்பட்டது என தெரிவிக்கப்பட்டுள்ளது. புரதத்தை கொண்டு வைரஸை அழிக்கும் வகையில் இந்த மருந்து உருவாக்கப்பட்டுள்ளது. இதற்கு வைரல் புரோட்டின் என்று பெயரிடப்பட்டுள்ளது. இந்த தடுப்பு மருந்துக்கு அனுமதி கிடைத்தால் சக்தி வாய்ந்த புதிய தடுப்பு மருந்தை உருவாக்கலாம் என விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

# பள்ளிகள் திறப்பு


விஜயபாரதம்

கொரோனா வைரஸ் தொற்று, பொதுமுடக்கம் காரணமாக கடந்த ஆண்டு மார்ச் மாதம் முதல் நாடு முழுவதும் பள்ளிகள் மூடப்பட்டு உள்ளன. இந்நிலையில் மூன்றாம் அலை வரும் என, நிபுணர்கள் கணித்திருப்பதால் பள்ளிகளைத் திறக்க பல மாநில அரசுகள் தயக்கம் காட்டி வருகின்றன. மாணவர்களுக்கு இணைய வழி வகுப்புகள் நடைபெற்று வருகின்றன. யுனிசெப் அமைப்பு, உலக சுகாதார நிறுவனம் அனைத்தும் பாதுகாப்பு வழிமுறைகள், தடுப்பூசி உள்ளிட்டவைகள் துணையுடன் பள்ளிகளை திறக்க உலக நாடுகளுக்கு கோரிக்கை வைத்துள்ளன. 'பள்ளிகளை திறக்கவில்லை எனில் ஒருதலைமுறையே பாழாகிவிடும் என வேதனை தெரிவித்துள்ளன. இந்நிலையில் உத்தரகண்டில் கொரோனா பரவல் குறைந்துள்ள நிலையில் வரும் ஆகஸ்ட் 1ம் தேதி முதல் 6 முதல் பிளஸ்2 வகுப்புவரை பள்ளிகளை திறக்க அம்மாநில அமைச்சரவை முடிவெடுத்துள்ளது. மத்தியப் பிரதேசம், இமாச்சலப் பிரதேசம், பீஹார், ஆந்திரா, பஞ்சாப் உள்ளிட்ட பல மாநிலங்களும் பள்ளிகள் திறப்பிற்கான அறிவிப்பை வெளியிட்டு உள்ளன.

# கிறிஸ்தவ சபைக்கு சீல்



விஜயபாரதம்

குடவாசல் அருகே உள்ள சிமினி ஊராட்சியை சேர்ந்த தலையாலங்காடு கிராமத்தில் நர்த்தனபுரீஸ்வரர் கோயில் பகுதியில் கடந்த மாதம் ஸ்பீக்கர் செட் மூலம் நாள் முழுக்க ஜெபகூட்டம் நடைபெற்றதாகவும் இது மக்களுக்கு மிகவும் இடையூறாக இருந்ததாகவும் கூறி அப்பகுதி மக்கள் தாசில்தாருக்கு மனு அளித்தனர். இதனை விசாரித்த அதிகாரிகள் அந்த திருச்சபைக்கு சீல் வைத்தனர்.

# திவாலானார் விஜய் மல்லையா



விஜயபாரதம்

பாரதத்தில் வங்கிகளில் கோடிக்கணக்கில் கடன் வாங்கி அதனை திருப்பிக் கட்டாமல் தப்பி ஓடி தற்போது லண்டனில் வாழ்ந்து வரும் விஜய் மல்லையாவை திவாலானவர் என்று லண்டன் உயர் நீதிமன்றம் அறிவித்துள்ளது. தீர்ப்பை எதிர்த்து முறையீடு செய்யப் போவதாக மல்லையா தெரிவித்தார். ஆனால் அதற்கான அனுமதியும் மறுக்கப்பட்டுள்ளது. வெளிநாட்டு பிரஜைகளை ஒப்படைப்பது தொடர்பான நடைமுறைகளில் தீர்வு ஏட்டப்பட்டதைத் தொடர்ந்து நீதிமன்றம் இந்தத் தீர்ப்பை அளித்துள்ளது. விஜய் மல்லையாவுக்கு எதிரான வழக்கை, பாரத ஸ்டேட் வங்கி கூட்டமைப்பில் பாங்க் ஆப் பரோடா, கார்ப்பரேஷன் வங்கி, பெடரல் வங்கி, ஐடிபிஐ வங்கி, இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, ஜம்மு அண்ட் காஷ்மீர் வங்கி, பஞ்சாப் அண்ட் சிந்த் வங்கி, பஞ்சாப் நேஷனல் வங்கி, ஸ்டேட் பாங்க் ஆப் மைசூர், யூகோ வங்கி, யுனைடெட் பாங்க் ஆப் இந்தியா, ஜேஎம் பைனான்சியல் அசெட் ரிகன்ஸ்ட்ரக் ஷன் உள்ளிட்ட 13 நிதி நிறுவனங்கள் ஒருங் ணைந்து நடத்தி வருகின்றன. இந்த தீர்ப்பு, வங்கிகள் கூட்டமைப்புக்கு கிடைத்த மிகப் பெரிய வெற்றியாகவே பார்க்கப்படுகிறது. இதன் மூலம் வங்கிகள் கடனை திரும்பப் பெறுவதற்கான வாய்ப்பு பிரகாசமடைந்துள்ளது.


# மைசூர் பருப்பு இறக்குமதி வரி ரத்து



விஜயபாரதம்

மசூர்தால் என அழைக்கப்படும் மைசூர் பருப்பு மீதான இறக்குமரி வரியை மத்திய அரசு ரத்து செய்துள்ளது. உள்நாட்டில் விலை உயர்வை கட்டுப்படுத்தும் நோக்கில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதற்கான அறிக்கையை மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்தார். அமெரிக்காவைத் தவிர பிறநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யபப்டும் மைசூர் பருப்புக்கு இந்த இறக்குமதி வரி ரத்து பொருந்தும், அமெரிக்காவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பருப்புக்கு 30 சதவிகிதமாக இருந்த வரி தற்போது 10 சதவிகிதமாக குறைக்கப்பட்டுள்ளது.

# பீகாரில் சூரியன் சிலை கண்டெடுப்பு


விஜயபாரதம்


பீகாரின் சஹர்சா மாவட்டத்தில் பாபா மாதேஸ்வர் தாம் கோயில் வளாகத்தில் நடைபெற்ற அகழ்வாராய்ச்சியின்போது, மூன்று அடி உயர கருப்புக் கல்லினால் செய்யப்பட்ட இரண்டு கைகளில் தாமரையை ஏந்திய சூரியனின் சிலை கண்டுபிடிக்கப்பட்டது. கி.பி 750 ஆண்டை சேர்ந்த பாலா வம்சத்தைச் சேர்ந்தது இந்த சிலை. முஸ்லிம் படையெடுப்பிற்கு பயந்து, மக்கள் தங்கள் தெய்வங்களின் சிலைகளை பூமிக்கு அடியில் புதைத்தல், கிணறுகள் அல்லது குளங்களில் மூழ்கடித்து பாதுகாத்தல் போன்ற செயல்களில் ஈடுபட்டனர். இதன் விளைவாகவே அகழ்வாராய்ச்சியின் போது அவை கிடைக்கின்றன என புர்னியா பல்கலைக்கழக வரலாற்றுத்துறை பேராசிரியர் நரேஷ் குமார் ஸ்ரீவாஸ்தவா கூறினார்.

# குழந்தை பெற்றால் உதவித்தொகை


விஜயபாரதம்

உலகமே மக்கள்தொகை பெருக்கத்தைப் பற்றியும் அதனால் ஏற்படும் பல்வேறு பிரச்சனைகள் குறித்தும் கவலை அடைந்துள்ளது. சமீபத்தில் உ.பி, அசாம் அரசுகள்கூட மக்கள்தொகை கட்டுப்பாட்டிற்காக புதிய வரைவு மசோதாவை தாக்கல் செய்தன. இந்நிலையில், கேரளாவில் பாலா மறைமாவட்டத்தில் உள்ள தேவாலயங்களுக்கு உட்பட்ட பகுதிகளில் வசிக்கும் கத்தோலிக்க குடும்பங்களில், ஐந்து மற்றும் அதற்கு மேல் குழந்தைகள் பெற்ற தம்பதிகளுக்கு மாதம் ரூ. 1,500 உதவித்தொகை வழங்கப்படும். அக்குழந்தைகளுக்கு மறைமாவட்டத்தின் கீழ் உள்ள கல்வி நிறுவனங்களில் இலவச கல்வியும், மருத்துவமனைகளில் இலவச மருத்துவ சிகிச்சை வழங்கப்படும்' என, தெரிவிக்கப்பட்டு உள்ளது. இது குறித்து பாலா மறைமாவட்ட குடும்ப நல இயக்கத்தின் பாதிரியார் ஜோசப் குற்றிங்கல் பேசும்போது, 'கேரளாவில் கத்தோலிக்கர் எண்ணிக்கை குறைந்து வருகிறது. எனவேதான், கத்தோலிக்கர்கள் குழந்தை பெற்றுக்கொள்வதை ஊக்குவிக்கும் வகையில் இந்த உதவிகள் வழங்கப்படுவதாக அறிவித்துள்ளோம்' என்றார்.

# புதிய கல்விக் கொள்கை பிரதமர் உரை


விஜயபாரதம்

கடந்த 1986ல் இயற்றப்பட்ட தேசிய கல்விக் கொள்கையில் பல்வேறு மாற்றங்கள் செய்யப்பட்டு, புதிய கல்விக் கொள்கை இயற்றப்பட்டது. இதற்கு பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான அமைச்சரவை குழு, கடந்த ஆண்டு ஜூலை 29ல் ஒப்புதல் அளித்தது. இதன் ஓராண்டு நிறைவை ஒட்டி, பிரதமர் மோடி வீடியோ கான்பரன்ஸ் வாயிலாக ஜூலை 29 வியாழன் அன்று உரையாற்ற உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அக்தருக்கு நீதிமன்றம் குட்டு



விஜயபாரதம்

பிரபல பாலிவுட் நடிகை கங்கனா ரனாவத், தனது பாஸ்போர்ட்டை புதுப்பிக்க பாஸ்போர்ட் அலுவலகத்தை அனுகியபோது அது சில காரணங்களால் மறுக்கப்பட்டது. இது தொடர்பாக அவர் தொடர்ந்த வழக்கில் தன்னை வலுக்கட்டாயமாக அதில் இணைத்துக் கொண்டார் பிரபல பாலிவுட் பாடலாசிரியர் ஜீவேத் அக்தர். கங்கனா மீது கிரிமினல் குற்றச்சாட்டு உள்ளது, எனவே அவரது பாஸ்போர்ட்டை புதுப்பிக்கக்கூடாது என வாதிட்டார். அந்த வழக்கில் விசாரணையே இன்னும் துவங்கவில்லை. எனவே தடை இல்லை என கூறப்பட்ட நிலையிலும் பிடிவாதமாக பாஸ்போர்ட்டை முடக்க முயற்சிகள் மேற்கொண்டார். இந்நிலையில், இதனை விசாரித்த நீதிபதிகள் குழு, நாங்கள் உங்கள் தலையீட்டை அனுமதித்தால் இதேபோல 100 பேர் அல்லது 1000 பேர்கூட இப்படி வந்துகொண்டே இருப்பார்கள். தகவல் கொடுக்க நீங்கள் யார்? அது உங்களுக்கு தேவையில்லை. அதற்கு அரசு இருக்கிறது. தலையிட உங்களுக்கு எந்த உரிமையும் இல்லை, என்று கூறி அவரது தலையீட்டை நிராகரித்தனர்.

# நானும் பிரதமர் ஆவேன்



விஜயபாரதம்

நிழல் உலக தாதா, மும்பை குண்டு வெடிப்பு குற்றவாளியான தாவூத் இப்ராஹிமின் பாகிஸ்தான் காதலியும் நடிகையுமான மெஹ்விஷ் ஹயாத் சமீபத்தில் ஜியோ டி.வி என்ற தொலைக்காட்சிக்கு பேட்டியளித்தார். அப்போது அவர், இம்ரான்கான் ஆட்சியால் நான் ஈர்க்கப்பட்டேன். அவர் பாகிஸ்தானில் நல்ல மாற்றங்களை கொண்டுவந்துள்ளார். நானும் வருங்காலத்தில் பிரதமராக விரும்புகிறேன். நாடாளுமன்றத்தில் சேர்ந்தோ அல்லது புதிய அரசியல் கட்சியை துவக்கியோ அரசியலில் வர விரும்புகிறேன். ஒரு கிரிக்கெட் வீரர் நாட்டின் பிரதமராக வரமுடியும் என்றால், நடிகர்களும் நிச்சயமாக பிரதமராக முடியும் என கூறியுள்ளார். அவரது இந்த பேட்டி பாகிஸ்தானின் திரையுலகம், அரசியல் என அனைத்திலும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.



# உலக கல்லீரல் அழற்சி தினம்

விஜயபாரதம்

கல்லீரலைத் தாக்கும் ஹெபடைடிஸ் கிருமிகளைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தவும், கல்லீரலைக் காக்கவும் உலக ஹெபடைடிஸ் தினம் இன்று அனுசரிக்கப்படுகிறது. மஞ்சள் காமாலை நோயை ஏற்படுத்தக்கூடிய வைரஸை கண்டறிந்த, "புலும்பர்க்' என்ற விஞ்ஞானியின் பிறந்த நாளான ஜூலை 28 உலக ஹெபடைடிஸ் தினமாக கடைபிடிக்கப்பட்டு வருகிறது.

"ஹெபடைடிஸ் பி' வைரஸால், மஞ்சள் காமாலை ஏற்படுகிறது. இந்த வைரஸ், ஏ, பி, சி, டி, இ என்று, ஐந்து வகையில் இருந்தாலும், "ஏ மற்றும் இ' வைரஸ் கிருமி, நம்முடைய கை சுத்தம் செய்யாமல் உணவு உட்கொள்வதன் காரணமாகத் தாக்குகிறது. இதன் பாதிப்பு, ஒரு வாரத்தில் சரியாகிவிடும். மற்ற மூன்று ஹெபடைடிஸ் வைரஸ் கிருமிகளும், ரத்தம் வழியாக பரவும் தன்மை கொண்டது.

"ஹெபடைடிஸ்' வைரஸ் தாக்காமல் இருக்க, குழந்தைகளுக்கு "இம்யுனோகுளோபல்' தடுப்பூசி போடப்படுகிறது. பெரியவர்களுக்கு ஹெச்.பி.எஸ்.ஏ.ஜி என்ற ரத்த பரிசோதனை மூலம் இதனை கண்டறியலாம். இதனை ஆரம்பகட்டத்திலேயே கண்டறிந்து முறையான சிகிச்சை எடுத்துக் கொள்வது அவசியம். இத்தகைய பாதிப்புகளுக்கு மதுப்பழக்கம், போதைப்பழக்கம், ரசாயனம், கொழுப்பு போன்றவையும் காரணமாக சொல்லப்படுகிறது.

கல்லீரலில் அழற்சி உள்ளவர்கள் திராட்சை ஜூஸ், கேரட் ஜூஸ் போன்றவற்றைத் தினமும் அருந்தலாம். எலுமிச்சைச் சாற்றை அதிகத் தண்ணீருடன் கலந்து குடித்து வந்தால் கல்லீரல் செல்கள் பலமடையும். அன்றாட சமையலில் பூண்டு, மோரில் சீரகத்தூள் கலந்து குடிக்கலாம். சமையல் எண்ணை, அசைவ உணவுகளை குறைப்பது அல்லது தவிர்ப்பது நல்லது.

கல்லீரல் தொடர்பான பிரச்சனை உள்ளவர்கள் துளசி, மாதுளம்பழத்துடன் 4 ஏலக்காய், அரை துண்டு சுக்கு சேர்த்து ஒரு டம்ளர் தண்ணீர் விட்டுக் காய்ச்சி பாதியாக வற்றியதும் பால், தேன் கலந்து குடித்து வந்தால் நோய் எதிர்ப்பு கிடைக்கும். இதைத் தவிர கீழாநெல்லி, கரிசலாங்கண்ணி, கொத்தமல்லி போன்றவற்றை உணவில் சேர்த்துக்கொள்வது நல்லது.

# உலக இயற்கை வளம் பாதுகாப்பு தினம்



விஜயபாரதம்

உலக இயற்கை வளம் பாதுகாப்பு நாள் ஒவ்வோர் ஆண்டும் ஜூலை 28ல் கொண்டாடப்படுகிறது. இயற்கையை நாம் பாதுகாத்தால், இயற்கை நம்மைப் பாதுகாக்கும் என்கிற நோக்கில் இந்நாள் கொண்டாடப்படுகிறது. உலகில் மக்கள் வாழ்வதற்கு இயற்கை வளம் இன்றியமையாதது.

ஆனால், நம்மால் இன்றைய சூழலில் சுத்தமான காற்றை சுவாசிக்க முடிவதில்லை. சுத்தமான நீரைப் பருக முடியாத நிலை உள்ளது. இவ்விரண்டுமே தனது தன்மையை இழந்து வருகிறது.

100 ஆண்டுகளுக்கு முன்பு உலகின் மொத்த வனங்களின் பரப்பளவு 70,000 லட்சம் ஹெக்டேர். பாரதத்தில் ஆண்டுதோறும் 15 லட்சம் ஹெக்டேர் வனப்பகுதி குறைந்து வருவதாகக் கூறப்படுகிறது. நாட்டின் வளங்களில் மூன்றில் ஒரு பங்கு வன வளம் இருக்க வேண்டும். ஆனால், தற்போது 19 சதவீதமாக உள்ளன. தமிழகத்தில் 13 சதவீதக் காடுகள்தான் இருக்கின்றன.


கடந்த 30 ஆண்டுகளில் நாம் அளவுக்கு அதிகமாகவே இயற்கை வளங்களை அழித்து, அனுபவித்து வருவதால் இன்று அவை அருகிவிட்டன. மனிதன் இயற்கையை சார்ந்தே வாழ்ந்து வருகிறான். ஆனால் அதனை அவன் இன்று மறந்துவிட்டான். இயற்கையின் முக்கியத்துவத்தை உணர்ந்துதான் நம் முன்னோர்கள் அவற்றை தெய்வமாக வழிபட்டனர்.

மனிதனின் பேராசை காரணமாக காடுகள் அழிப்பு, மலைகள் அழிப்பு, மணல் கடத்தல், பிளாஸ்டிக் பயன்பாடு, ரசாயன உரங்கள், ஆயுத பெருக்கம் என பஞ்சபூதங்களையும் பாழ்படுத்தி வருகிறான். உலகில் மனிதனைத் தவிர வேறு எந்த உயிரினமும் இயற்கைக்கு பாதகமாக நடந்துக் கொள்வதில்லை. மாறாக இயற்கையை வளர்க்கவே செய்கின்றன. ஆனால் மனிதன்?

உதாரணமாக, ஒரு சொட்டு நீர்கூட உற்பத்தி செய்யமுடியாத மனிதன் அதனை பாழாக்கத் தயங்குவதே இல்லை. மனிதனின் கைப்பட்ட பிறகு நீர் என்பது பெயர் மாறி சாக்கடை என்ற பெயரை பெருகிறது. எனவே, இனியாவது சிந்திப்போம்.

நமக்கு இருப்பதோ ஒரேபூமி, இதில்தான் நமது வருங்கால சந்ததியினர் வாழ வேண்டும். எனவே, இதனை நமது சந்ததியினருக்கு நல்ல முறையில் விட்டு செல்வது நமது கடமை என்பதை நாம் ஒவ்வொருவரும் உணர வேண்டும். இயற்கையை பாதுகாக்க வேண்டும்.

# ஏ.வி. மெய்யப்ப செட்டியார்



விஜயபாரதம்

வெள்ளித் திரையின் வெளிச்சத்தில் ஒளிரும் ஏ.வி.எம் என்ற அந்த மூன்றெழுத்து தரத்தின் சான்று. வன்முறையற்ற, ஆபாசமற்ற, எல்லோரும் பார்க்கத் தகுந்த திரைப்படம் என்பதன் ஐ.எஸ்.ஐ முத்திரை அது.

பல கலைஞர்களை, எழுத்தாளர்கள், தொழில்நுட்ப வல்லுநர்களை அடையாளம் கண்டு தமிழ் சினிமாவுக்கு தந்த ஏ.வி. மெய்யப்ப செட்டியாரின் பிறந்தநாள் இன்று.

அவரது வாழ்க்கை சாகசங்களால் நிரம்பியது. இழப்புகளுக்கு உடைந்து போகாமல், கனவுகளைச் சிதறவிடாமல் அனைவரையும் ஒருங்கிணைத்த அடுத்தடுத்த அவரது நகர்வுகள், ஒரு மாபெரும் நிறுவனமாக ஏவி.எம் நிறுவனத்தை வளர்த்தெடுத்தன.

சிறு வயதிலேயே வணிகத்தில் ஆர்வம் இருந்தது மெய்யப்பனுக்கு. அப்பா நடத்திய கடையில் வணிக நுட்பங்களைக் கற்றார். 22 வயதில் போர்டு கார் கம்பெனியின் முகவரானார். சினிமா மீது ஈர்ப்பு ஏற்பட்டு `சரஸ்வதி ஸ்டோர் ரெக்கார்டிங் கம்பெனி' நிறுவனத்தைத் தொடங்கினார்.

கொல்கத்தா சென்று அல்லி அர்ஜுனா, ரத்னாவளி போன்ற திரைப்படங்களை எடுத்தார். அவை எதிர்பார்த்த வெற்றியைத் தரவில்லை. ஆனாலும், முடங்கவில்லை. பூகைலாஷ், திருவள்ளுவர் போன்ற படங்களைத் தயாரித்தார். சபாபதி என்ற படத்தை அவரே இயக்கினார். தமிழைக் கடந்து கன்னடத்துக்கும் பயணமானார்.

கிராபிக்ஸ் பற்றி சிந்தித்திராத காலகட்டத்தில் `வேதாள உலகம்' படத்தில் மந்திர, தந்திரக் காட்சிகளெல்லாம் கேமராவைப் பயன்படுத்தியே எடுத்துக்காட்டினார். சகல வசதிகளுடன் சென்னையில் ஏ.வி.எம் ஸ்டுடியோவை உருவாக்கினார்.

தன் வெற்றிக்குப் பின்னணியாக இருந்த தொழிலாளர்கள் மீது மிகுந்த அன்பு கொண்டிருந்தார். அவர்களுக்கு குடியிருப்புகள் கட்டிக்கொடுத்தார். பலருக்கு திருமணம் செய்து வைத்திருக்கிறார். அவர்களின் பிள்ளைகள் படிக்க பள்ளியும் தொடங்கினார்.

ஏ.வி.எம் கடுமையான உழைப்பாளி. குறை பொறுக்க மாட்டார். ஆனால், நல்ல விஷயங்களை மனம் திறந்து பாராட்டுவார்.

ஏ.வி.எம்மின் முதல் தயாரிப்பு நாம் இருவர். அந்தப் படத்தில் பாரதியாரை பாடலாசிரியராக்கினார் மெய்யப்பன். அன்றைய முதல்வர் ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார், பாரதியார் பாடல்களை அரசுடமையாக்க விரும்பினார். அவற்றின் உரிமையை வைத்திருந்த மெய்யப்பனை அணுகி, `எவ்வளவு பணம் வேண்டும்' என்று கேட்க, `பாரதி இந்தத் தேசத்தின் சொத்து. ஒரு ரூபாய்கூட வேண்டாம்' என்று அள்ளிக் கொடுத்தார் மெய்யப்பன்.